**செ.வெ. எண்: 326** **நாள்:06.06.2012**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(6.6.2012)** தலைமைச் செயலகத்தில், 5வது முறையாக உலக செஸ் சாம்பியன் பட்டம் வென்ற திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் ஊக்கத் தொகைக்கான காசோலையை வழங்கி பாராட்டினார்கள்.

இளைஞர்கள் இடையே விளையாட்டு ஆர்வத்தினை வளர்க்கும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1992ஆம் ஆண்டு இளைஞர் மற்றும் விளையாட்டு பயிற்சித்துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து “தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்” என்ற ஆணையத்தை உருவாக்கினார்கள். மேலும், தலைசிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன் அவர்கள் உயர்ந்த சாதனைகள் புரிந்திடும் வகையில், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர்கள் மற்றும் வீராங்களைகளை ஊக்கப்படுத்தும் வகையில் 6.9.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகையினை இருமடங்காக உயர்த்தி அறிவித்தார்கள்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் மே மாதம் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன் போட்டியில் வெற்றி பெற்று, உலக செஸ் சாம்பியன் பட்டத்தை 5வது முறையாக வென்று தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்த திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களின் சாதனையைப் பாராட்டியும், உலக செஸ் சாம்பியன் பட்டத்தை மேலும் பல ஆண்டுகள் தக்க வைத்துக் கொள்ளவும் வாழ்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பினார்கள். மேலும், அவரை கவுரவிக்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.6.2012 அன்று அறிவித்தார்கள்.

அதன்படி, உலக செஸ் சாம்பியன் பட்டத்தை 5வது முறையாக வென்று சாதனை படைத்த திரு.விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், 2 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கி, பாராட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஊக்கத் தொகையினை பெற்றுக் கொண்ட உலக செஸ் சாம்பியன் திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள், தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டார். மேலும், செஸ் விளையாட்டை மாணவர்களிடம் ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்காக தனது நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் மற்றும் திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களின் மனைவி திருமதி. அருணா ஆனந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 6.6.2012